வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 06.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பீகாரில், 18 மாவட்டங்களுக்கு உட்பட்ட 121 தொகுதிகளில், முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் சனிக்கிழமை வாரணாசியில், 4 புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை தொடக்கி வைக்கிறார்.

சென்னையில் நடைபெறும் இண்டியா கேம் டெவலப்பர் மாநாட்டில், தமிழக அரசு, இத்துறை சார்ந்த பல்வேறு நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

புதுச்சேரியில், இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான, மாவட்ட நிலை கலா உத்சவ் போட்டிகள், ஜவஹர் சிறுவர் இல்லத்தில் நடைபெற்று வருகின்றன.

------------------------

*பீகார் தேர்தல் (14)*

பீகாரில், 18 மாவட்டங்களுக்கு உட்பட்ட 121 தொகுதிகளில், முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது. பிற்பகல் 3 மணி நிலவரப்படி, 53.77 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. இறுதி வாக்குப்பதிவு சதவிகிதம் பற்றிய விவரங்கள், எதிர்பார்க்கப் படுகின்றன. இன்றைய தேர்தலின் போது, பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார், துணை முதலமைச்சர் திரு. சாம்ராட் சவுத்ரி, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய், லோக் ஜன சக்தி ராம்விலாஸ் பிரிவின் தலைவர் திரு. சிராக் பாஸ்வான் உட்பட, முக்கிய தலைவர்கள் பலர், போட்டிக் களத்தில் இருந்தனர். இன்றைய முதல்கட்டத் தேர்தலில்,

காலை 7 மணி முதல், மாலை 6 மணி வரை, வாக்குப்பதிவு நடைபெற்றது. ஆயினும், பக்தியார்பூர், மகிஷி, முங்கேர், தாராபூர் உள்ளிட்ட தொகுதிகளில், பாதுகாப்பு காரணங்களுக்காக, வாக்குப்பதிவு மாலை 5 மணியுடன் முடித்துக் கொள்ளப்பட்டது. தேர்தல் நடைபெற்ற தொகுதிகளில், பாதுகாப்பு ஏற்பாடுகள் விரிவான முறையில் செய்யப்பட்டு இருந்தன.

------------------------

முர்மு-கிரிக்கெட் (9)

ஐசிசி மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரில், உலகக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணியினர், இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்திய மகளிர் கிரிக்கெட் அணியினர், புதிய வரலாறு படைத்து, இளம் தலைமுறையினருக்கு முன்மாதிரியாக மேம்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர் கூறினார். உலகக் கோப்பை வென்ற இந்திய அணியில், பல்வேறு பிராந்தியங்கள், சமூகச் சூழல்கள், மற்றும், பின்னணிகளைச் சேர்ந்தவர்கள் கலந்து இடம்பெற்றுள்ளதை, அவர் சுட்டிக் காட்டி பாராட்டினார்.

------------------------

மோடி-வாரணாசி (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் சனிக்கிழமை, வாரணாசிக்கு பயணம் மேற்கொண்டு, 4 புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை, கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

பனாரஸ்-கஜுராஹோ,

லக்னோ-சகாரன்பூர்,

ஃபெரோஸ்பூர்-டெல்லி, மற்றும்,

எர்ணாகுளம்-பெங்களூரு வந்தே பாரத் ரயில்கள் இதில் அடங்கும்.

பிரதமர் தொடக்கி வைக்கும் வந்தே பாரத் ரயில்கள், முக்கிய நகரங்களுக்கு இடையிலான பயண நேரத்தை கணிசமாக குறைத்து, உலகத் தரம் வாய்ந்த பயண வசதிகளை மக்களுக்கு வழங்க உள்ளன. இதில் எர்ணாகுளம்-பெங்களூரு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில், இவ்விரு நகரங்களுக்கு இடையிலான பயணத்தை, சுமார் 2 மணி நேரம் குறைக்கும் என்பதும், முக்கிய ஐடி கேந்திரங்கள், மற்றும், வர்த்தக மையங்களை இணைக்கும் வகையிலான இந்த ரயில், மாணவர்கள், ஐடி ஊழியர்கள், மற்றும், சுற்றுலா பயணிகளுக்கு மிக பயனுள்ளதாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*ஜிஎஸ்டி – அசாம் 1* (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், அசாமில், பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி –அசாம் 2* (16)

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், அசாமில், நெசவாளர்கள், விவசாயிகள், மற்றும், சிறு வணிகர்களுக்கு, முக்கிய பலன்கள் ஏற்பட்டுள்ளன. புதிய விதிமுறைகளின் கீழ், அசாமின் பாரம்பரிய, மற்றும் பிராந்திய உற்பத்திப் பொருட்கள் மீது ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, அசாம் தேயிலை மீதான ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், தேயிலையின் விலை குறைந்து, உள்நாட்டு, மற்றும் சர்வதேச சந்தையில் போட்டித் திறன் அதிகரித்துள்ளது. அசாமின் புகழ்பெற்ற மூகா பட்டு, மற்றும் கமோசா பட்டுத் துண்டுகள் மீதான

வரியும் 12ல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், பாரம்பரிய நெசவாளர்களின் வருமானம் அதிகரித்துள்ளது. 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையுள்ள ஓட்டல் அறை வாடகை மீதான வரியும், 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளதால், அசாமில், சுற்றுலாத் துறையும் ஊக்கம் பெற்றுள்ளது. மாநிலத்தின் ஊரகப் பகுதிகள் உட்பட எல்லா பகுதிகளிலும், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், விற்பனை, வேலை வாய்ப்புகள், மற்றும், மக்களின் வருமானம் அதிகரித்து. பொருளாதாரம் வலுப்பெற்று வருவதை தெளிவாகவே காண முடிகிறது.

------------------------

வந்தே மாதரம் 1 (18)

வந்தே மாதரம் தேசியப் பாடலின் 150ஆம் ஆண்டுக் கொண்டாட்டங்கள், நாடு முழுவதும் நாளை தொடங்குகின்றன. வந்தே மாதரம் வெற்றி முழக்கப் பாடல், எல்லா இல்லங்களிலும் ஒலிக்கட்டும் என்றும், இப்பாடலால் நமது உள்ளங்களில், தேச பக்தி ஒளிரட்டும் என்றும், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர எல். முருகன் கூறியுள்ளார்.

1882ஆம் ஆண்டு, பங்கிம் சந்திர சாட்டர்ஜி-யின் ஆனந்த மடம் வங்க மொழிப் புதினத்தில் இடம்பெற்ற வந்தே மாதரம் தேசப் பக்திப் பாடலை, குருதேவ் ரவீந்திரநாத் தாகூர், 1896ஆம் ஆண்டு, கொல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் முதல் முறையாக பாடினார். விடுதலைப் போராட்ட காலத்தில், விடுதலை உணர்வைத் தூண்டி, மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்துவதில், வந்தே மாதரம் பாடல் முக்கிய பங்காற்றியது. வந்தே மாதரம் என்பது, சுதந்திரப் போராட்ட வீரர்கள் உட்பட, நாட்டு மக்கள் அனைவரின் விடுதலை முழக்கமாகவே திகழ்ந்தது. 1950ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி, அரசியல் நிர்ணய சபை, இப்பாடலை, தேசியப் பாடலாக அங்கீகரித்தது. ஜன கன மன தேசிய கீதத்திற்கு இணையான மதிப்பை, வந்தே மாதரம் தேசியப் பாடலுக்கும் வழங்க வேண்டும் என, அரசியல் நிர்ணய சபையின் தலைராக, அப்போது இருந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத் அறிவித்தார்.

வந்தே மாதரம் 2 (4)

தேசப்பற்று என்பது, வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட உணர்வு என்றால், விவரிக்க முடியாத அந்த உணர்வுக்கு குரல் வடிவம் கொடுப்பதே, வந்தே மாதரம் பாடல் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மன் கீ பாத் நிகழ்ச்சி ஒன்றில் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

கேமிங் (20)

சென்னையில் நேற்று தொடங்கிய 3 நாள் இண்டியா கேம் டெவலப்பர் மாநாட்டில், தமிழக அரசு, இன்று, துறை சார்ந்த பல்வேறு நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இம்மாநாட்டில் பேசுகையில், சென்னையில் தகைசால் கேமிங் மையம், 6 மாதங்களுக்குள் நிறுவப்படும் என்றார். கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை ஆகிய இடங்களில், பிராந்திய மையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கேமிங் நிறுவனங்களுக்கு தேவையான அனுமதிகளை ஒற்றை சாளர முறையில் வழங்க, பிரத்யேக வசதி மையங்கள் அமைக்கப்படும் என்றும். இதனால், தமிழகத்தல் வர்த்தகம் புரிதல் எளிதாகும் என்றும் அவர் கூறினார். தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில், 10 ஆயிரத்து 800 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடக்கப் பட்டுள்ளதாகவும், செயற்கை நுண்ணறிவு, மற்றும், இதர நவீன தொழில்நுட்பத் துறைகளில், தமிழகம் வரலாறு படைத்து வருவதாகவும், அவர் குறிப்பிட்டார். இந்தியா கேம் டெவலப்பர் சங்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த 3 நாள் மாநாட்டில், உலகெங்கிலும் இருந்து, படைப்பாளிகள், ஸ்டுடியோக்கள், முதலீட்டாளர்கள் உட்பட,4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். துறை சார்ந்த 200 நிபுணர்களின் பங்கேற்புடன், 150க்கும் மேற்பட்ட அமர்வுகள், இம்நாட்டில் இடம்பெறுகின்றன.

------------------------

*கலா உத்சவம் (16)*

இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான, மத்திய கல்வி அமைச்சகத்தின் கலா உத்சவ் போட்டிகளின் ஒருபகுதியாக, புதுச்சேரியில், பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, மாவட்ட அளவிலான கலா உத்சவ் போட்டிகள், ஜவஹர் சிறுவர் இல்லத்தில் நடைபெற்று வருகின்றன. நேற்று, வாய்ப்பாட்டு, இசை, ஓவியம், மற்றும் கைவினைப் போட்டிகளும், இன்று, நடனம், குழு நடனம், இசைக் கருவி மீட்டல் ஆகிய போட்டிகளும் நடைபெற்றன. இன்றைய போட்டிகளில், 95 அரசு, மற்றும், தனியார் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 130 மாணவர்கள் கலந்து கொண்டு, தங்களின் கலைத் திறன்களை வெளிப்படுத்தினர். நாளைய தினம், நாடகம், மற்றும், பாரம்பரிய கதை சொல்லல் போட்டிகள் நடைபெற உள்ளது. மாவட்ட அளவிலான கலா உத்சவ் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ-மாணவிகள், வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ள, மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெறுவார்கள். போட்டிகளுக்கான நோடல் அதிகாரியும், ஜவஹர் பால்பவன் தலைமை ஆசிரியருமான திரு. மணிவேல், இதுகுறித்து எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில்இருந்து ஒருபகுதி....

(வாய்ஸ்-மணிவேல்)

------------------------

*காரைக்கால் ஜனனிகா* (7)

அண்மையில் சீனாவில் நடைபெற்ற, 17 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான ஆசிய பேட்மிண்டன் போட்டிகளில், இந்தியாவின் சார்பில் பங்கேற்று வெண்கலப் பதக்கம் வென்று திரும்பியுள்ள காரைக்கால் மாணவி ஜனனிகா, இன்று புதுச்சேரியில் முதலமைச்சர் திரு. ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து, பதக்கத்தை காண்பித்து வாழ்த்து பெற்றார். சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்திர பிரியங்கா உள்ளிட்டோர் இந்த சந்திப்பின் போது உடன் இருந்தனர்.

------------------------

*திரைப்பட விழா* (9)

கோவாவில் நடைபெற உள்ள, இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ள வேவ்ஸ் பஜாரில், ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான waves-X அமைப்பின் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கண்காட்சியில், கேளிக்கை, மற்றும் ஊடகத் துறை சார்ந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. விருப்பமுள்ள ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், அதிகாரப்பூர்வ வேவ்ஸ் பஜார் இணைய தளம் மூலமாக பதிவு பெறலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

*விமான எரிபொருள்* (12)

நீடித்த விமான எரிபொருள் உற்பத்தியில், உலகின் முன்னணி நாடாக இந்தியாவை மேம்படுத்த, வலுவான கொள்கை ஒன்றின் அடிப்படையில், மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு, கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இதுகுறித்த மாநாடு ஒன்றில் உரையாற்றிய அவர், நீடித்த விமான எரிபொருள் உற்பத்திக்குத் தேவையான இடுபொருள், மற்றும், இதர வசதிகள், மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் அதிகம் என்றார். உலக அளவிலான விமானப் போக்குவரத்துத் துறையின் நீடித்த விமான எரிபொருள் தேவை, 2030ஆம் ஆண்டிற்குள், 183 மில்லியன் டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளதாகவும், இதை இந்தியா நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

-----------------------

*வானிலை* (9)

இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கள்ளக்குறிச்சி,

சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில், ஒரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 12ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில், 12.செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி நகரப் பகுதியில் 2 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

கிரிக்கெட் (7)

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே, குவின்ஸ்லாந்தில் இன்று நடைபெற்ற, 4ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி, 48 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டியில், 168 ரன் என்னும் வெற்றி இலக்குடன் 2ஆவதாக ஆடிய ஆஸ்திரேலிய அணி, 19ஆவது ஓவரிலேயே, 119 ரன்னுக்கு ஆட்டம் இழந்து, தோல்வி அடைந்தது. இன்றைய வெற்றியுடன் சேர்த்து, 5 போட்டிகளை கொண்ட இத்தொடரில், இந்தியா, 2க்கு 1 என்ற கணக்கில், முன்னிலையில் உள்ளது.

------------------------

*மகளிர் ஆணையம்* (7)

பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்களை தடுப்பது குறித்து, தேசிய மகளிர் ஆணையம், நாடு முழுவதும் பல்வேறு ஆலோசனை அமர்வுகளை நடத்தி, தனது பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. பெண்கள் இத்தகைய குற்றங்களுக்கு ஆளானால், பிரச்சனை எழுப்பவும், புகார்ப் பதிவு செய்யவும், தயங்கக் கூடாது என்று, தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி விஜயா ராஹத்கர், இன்று புதுடெல்லியில், ஆகாசவாணி செய்திகளுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

------------------------

பீகாரில், 18 மாவட்டங்களுக்கு உட்பட்ட 121 தொகுதிகளில், முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் சனிக்கிழமை வாரணாசியில், 4 புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை தொடக்கி வைக்கிறார்.

சென்னையில் நடைபெறும் இண்டியா கேம் டெவலப்பர் மாநாட்டில், தமிழக அரசு, இத்துறை சார்ந்த பல்வேறு நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

புதுச்சேரியில், இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான, மாவட்ட நிலை கலா உத்சவ் போட்டிகள், ஜவஹர் சிறுவர் இல்லத்தில் நடைபெற்று வருகின்றன.